பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

01 08 2026 6 45

சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- வன்முறையும் வெறுப்பும் எந்தப் பிரச்சனைக்கும் தீர்வாகாது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- விளையாட்டுத் துறையை மேம்படுத்தும் வகையில், கேலோ இந்தியா திட்டம் மற்றும் தேசிய விளையாட்டு கூட்டமைப்புகளுக்கான நிதியுதவியை நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- அரசுப் பள்ளிகளில் காலியாக உள்ள உடற்பயிற்சி ஆசிரியர் பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்று பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. ராஜ்மோகன் தெரிவித்துள்ளார்.
- தமிழகத்தில் உள்ள தொழிற்பயிற்சி நிறுவனங்களில் மாணவர்களின் நேரடி சேர்க்கைக்கான கால அவகாசம் இம்மாதம் 14ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக மாநில அரசு அறிவித்துள்ளது.
- காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில், ஈட்டி எறிதலில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா வெள்ளிப் பதக்கமும், யஷ்வீர் சிங் வெண்கலப் பதக்கமும் வென்றனர்.

--- இனி விரிவான செய்திகள் ---

**<<<<>>>>**

வன்முறையும் வெறுப்பும் எந்தப் பிரச்சனைக்கும் தீர்வாகாது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தடம் மாறிச் சென்ற திசைமாறிய இளைய தலைமுறையினரை தண்டிக்காமல், நாட்டு நலன் மற்றும் தேசிய கட்டமைப்பு உணர்வுடன் அவர்களைச் சரியான பாதையில் அழைத்துச் செல்ல வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

தலைநகர் தில்லி ஜந்தர் மந்தர் பகுதியில் அண்மையில் நடைபெற்ற போராட்டத்தைக் குறிப்பிட்டு பிரதமர் தனது சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள காணொலியில் இதனைத் தெரிவித்துள்ளார்.

சமூகத்தில் நிலவும் கோபமும் ஏமாற்றமும் இயல்பானதே என்றாலும், இளமைப் பருவம் என்பது கற்றுக்கொள்வதற்கும், தவறுகளைத் திருத்திக் கொள்வதற்குமான காலம் என்றும் அவர் கூறியுள்ளார்.

இளைஞர்களை நீதிமன்ற வழக்குகளுக்கு இழுப்பதோ அல்லது சமூக ரீதியாகத் துன்புறுத்துவதோ தீர்வாகாது என்றும், சமூகம் அவர்களை அரவணைத்துச் சரியான பாதையைக் காட்ட வேண்டும் என்றும் திரு. நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

விளையாட்டுத் துறையை மேம்படுத்தும் வகையில், கேலோ இந்தியா திட்டம் மற்றும் தேசிய விளையாட்டு கூட்டமைப்புகளுக்கான நிதியுதவியை நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இதற்காக 2026-27 முதல் 2030-31 வரையிலான ஐந்தாண்டு காலத்திற்கு 36 ஆயிரத்து 441 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்று செய்தியாளர்களிடம் தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறினார்.

அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பின்னர் நேற்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இளைஞர்களின் வளர்ச்சிக்கும் நாட்டின் முன்னேற்றத்திற்கும் விளையாட்டு மிக முக்கியம் என்று கூறினார்.

ஒவ்வொரு திறமையான இளைஞரும் விளையாட்டில் சாதிக்க இத்திட்டம் உறுதுணையாக இருக்கும் என்றும், அடிமட்ட அளவில் தொடங்கி ஒலிம்பிக் வரை வீரர்கள் பயிற்சி பெற நாடு முழுவதும் கட்டமைப்புகள் உருவாக்கப்படும் என்றும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<>>>>

அரசுப் பள்ளிகளில் விளையாட்டு ஆசிரியர் பணியிடங்கள் 50 சதவீதம் காலியாக இருப்பதாகவும், அவை விரைவில் நிரப்பப்படும் என்றும் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. ராஜ்மோகன் தெரிவித்துள்ளார்.

ஈரோட்டில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பள்ளிகளில் விளையாட்டுப் பாடத்தை ரத்து செய்யக் கூடாது என்று அறிவுறுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

அரசுப் பள்ளிகளில் அடிப்படை வசதிகள் முழுமையாக செய்து தரப்படும் என்றும், எந்தந்த பள்ளிகளில் கழிப்பறைகள் இல்லை என்பதை அதிகாரிகள் ஆய்வு செய்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மதிய உணவில் அசைவம் வழங்குவது குறித்து முதலமைச்சர் உரிய முடிவெடுத்து அறிவிப்பார் என்றும் அவர் தெரிவித்தார்.

பள்ளிக் குழந்தைகளுக்கு தரமான சீருடைகள் வழங்கப்படும் என்றும், இதுகுறித்த அறிவிப்புகள் வரும் நிதிநிலை அறிக்கையில் இடம்பெறும் என்றும் திரு. ராஜ்மோகன் கூறினார்.

<<<<>>>>

நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் மற்றும் குமாரபாளையம் பகுதிகளில் சுத்திகரிக்கப்படாத கழிவுநீரைச் சாக்கடை கால்வாய்களில் சட்டவிரோதமாக வெளியேற்றும்

சாயப்பட்டறைகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் திருமதி சி. விஜயலட்சுமி எச்சரித்துள்ளார்.

பள்ளிபாளையம் - சங்ககிரி சாலையில் தடையை மீறி அந்தச் சாய ஆலை மீண்டும் சட்டவிரோதமாக இயங்குவதாக வந்த ரகசியத் தகவலின் அடிப்படையில், அமைச்சர் அங்கு நேற்று நள்ளிரவில் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

அமைச்சர் வருவதை அறிந்ததும், சாய ஆலைக்குள் பணியில் இருந்த தொழிலாளர்கள் அங்கிருந்து தப்பியோடினர்.

அதனைத் தொடர்ந்து ஆலையின் உள்ளே பார்வையிட்ட அமைச்சர், சட்டவிரோதமாகச் சாயப்பபணிகள் நடைபெற்று வருவதை நேரில் கண்டறிந்து உறுதி செய்தார்.

இதுகுறித்து துறைசார்ந்த அதிகாரிகளுடன் அவர் கலந்தாலோசனை நடத்திய பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில், தடையை மீறி சட்ட விரோதமாகச் செயல்படும் ஆலைகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் உள்ள தொழிற்பயிற்சி நிறுவனங்களில் மாணவர்களின் நேரடி சேர்க்கைக்கான கால அவகாசம் இம்மாதம் 14ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக மாநில அரசு அறிவித்துள்ளது.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின்கீழ் மாநிலத்தில் 132 அரசு தொழில்பயிற்சி நிலையங்களும், 277 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் செயல்பட்டு வருவதாக மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தொழிற்பயிற்சி நிலையங்களில் நடப்பாண்டுக்கான மாணவர் சேர்க்கை கலந்தாய்வு நேற்றுடன் நிறைவடைந்த நிலையில், மாணவர்களின் நலன் கருதி நீட்டிக்கப்பட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

கடந்த ஆண்டு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்றவர்களில் 95 சதவீதத்தினர் பல்வேறு முன்னணி தொழில் நிறுவனங்களில் வேலைவாய்ப்பை பெற்றுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

போதைப்பொருள் இல்லாத இந்தியாவை உருவாக்கும் நோக்கில் தூத்துக்குடியில் நேற்று விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

நாட்டு நலப்பணித் திட்டம் மற்றும் மை பாரத் கேந்திரா சார்பில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் ஏராளமானோர் கலந்துகொண்டதாக மாவட்ட இளைஞர் அலுவலர் திரு. ஞானச்சந்திரன் கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் கோவை, திருநெல்வேலி மாவட்ட மலைப் பகுதிகள், நீலகிரி, தேனி, கன்னியாகுமரி மாவட்டங்களில் இன்று ஓரிரு இடங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

மலையை ஒட்டியுள்ள ஏனைய மாவட்டங்கள், வட கடலோர தமிழகத்தின் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ஈரானின் எரிசக்தி இலக்குகளைக் குறிவைத்து அமெரிக்கா மீண்டும் தாக்குதல் நடத்தக்கூடும் என்று அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

<<<<>>>>

பலுசிஸ்தானில் போராட்டம் நடத்தி வரும் நபர்களை பாகிஸ்தான் ராணுவம் கைது செய்து மறைவிடத்தில் கொண்டு சென்று துன்புறுத்துவதாக சர்வதேச பொது மன்னிப்புச் சபை குற்றம் சாட்டியுள்ளது.

<<<<>>>>-

சத்தீஸ்கட் மாநிலம் காங்கர் மாவட்டத்தில் மலேரியாவால் 5 பேர் உயிரிழந்தது தொடர்பாக தேசிய மனித உரிமை ஆணையம் தாமாக முன்வந்து விசாரணை மேற்கொண்டுள்ளது.

<<<<>>>>

நுகர்வோர் பாதுகாப்புத்துறையில் கணினி மேலாளர் பணியிடங்களுக்குத் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை அமைச்சர் திரு. வெங்கடரமணன் நேற்று வழங்கினார்.

<<<<>>>>-

விழுப்புரம் மாவட்டத்தில் 41 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டங்களை ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. ஆனந்த் நேற்று தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

சென்னை மாநகராட்சியில் மின் ஒப்பந்தப்புள்ளி தொடர்புடைய பணிகளை மேற்கொள்வது தொடர்பாக அலுவலர்களுக்கான பயிற்சியை நேற்று ஆணையர் திரு. சமீரன் தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

திருவள்ளூர் மாவட்ட திறன் பயிற்சி அலுவலகத்தில் பிரதமரின் தொழில்பழகுநர் வேலைவாய்ப்புத் திருவிழா நடைபெற உள்ளதாக மாவட்ட ஆட்சியர் திருமதி கவிதா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

சென்னை துறைமுகத்தில் இருந்து கனிமங்களை ஒரே நாளில் அதிக அளவில் ஏற்றுமதி செய்து சாதனை படைக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில், ஈட்டி எறிதலில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா வெள்ளிப் பதக்கமும், யஷ்வீர் சிங் வெண்கலப் பதக்கமும் வென்றனர்.

கிளாஸ்கோவில் நேற்று நடைபெற்ற ஈட்டி எறிதல் இறுதிபோட்டியில் நீரஜ் சோப்ரா, 85 புள்ளி எட்டு மூன்று மீட்டர் தொலைவிற்கு ஈட்டி எறிந்து இந்தப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

காமன்வெல்த் போட்டிகளில் முதல்முறையாக களமிறங்கிய யஷ்வீர் சிங், 85 புள்ளி நான்கு மீட்டர் தூரம் எறிந்து தன் சொந்த சாதனையை முறியடித்தார்.

ஜூடோ போட்டியில் இந்தியாவின் அஸ்மிதா தே மற்றும் ஹர்ஷ் சிங், தங்கம் வென்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

இவர்களுடன் யாமினி மௌரியா வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.

காமன்வெல்த் போட்டியில் டெக்கத்லான் பிரிவில் முதல் பதக்கம் வென்ற இந்தியர் என்ற வரலாற்றுச் சாதனையை தேஜஸ்வின் ஷங்கர் படைத்துள்ளார். அவர் இப்போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றார்.

மகளிர் குத்துச்சண்டை போட்டியில் 70 கிலே எடைபிரிவில் நடப்புச் சாம்பியனான ரோசி எக்லெஸை வீழ்த்தி, அருந்ததி சௌத்ரி வெற்றி பெற்றார்.

ஜாஸ்மின் லம்போரியா, லவ்லினா போர்கேன் மற்றும் வேறு ஏழு இந்திய வீரர்களும், வீராங்கனைகளும் தங்கப் பதக்கச் சுற்றுப் போட்டிகளுக்கு முன்னேறியுள்ளனர்.

புல் பந்துப் போட்டியில் இந்தியாவின் ஆதிக்கம் தொடர்கிறது. இதில் ஆடவர் இரட்டையர் அணி தொடர்ந்து நான்காவது வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

இதுவரை காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா 5 தங்கம், 12 வெள்ளி மற்றும் 6 வெண்கலம் என 23 பதக்கங்களை வென்றுள்ளது.

<<<<The End>>>>